நேரத்திலே அவர்களுக்கு காலை முதல் மாலைவரை நேரம் பிடிக்கிற காரணத்தினாலே, மழையாலும், வெயிலினாலும் பாதிக்கப்படு கிறார்கள். எனவே அந்த நிலையத்தின் காம்பவுண்டுக்குள் ஒரு கொட்டகை அமைத்துக் கொடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாகக் கேள்வி கேட்டால் அந்த ஊரிலே கொட்டகை இருக்கிறதா, வேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கலாம்.

மதுரை மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல்

* **வினா 87.—திருமதி கே. பி. ஜானகியம்மாள்** : மாண்புமிகு தொழிலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வலையங்குளம் முதல் பாரப்பத்தி வரையில் சுண்ணாம்புக்கல் கிடைப்பது பற்றி தகவல் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அங்கு ஆராய்ந்தறிய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். (வலையங் குளத்திற்கும் பாறைப்பட்டிக்கும் இடையில்) இளையார்ப்பட்டிக்கு அருகில் காணப்படும் சுண்ணாம்புப் பளிங்குகள் பற்றி தொழில் துறையைச் சேர்ந்த மாநிலப் புவியியல் பிரிவு ஏற்கெனவே ஆய்வு நடத்தியுள்ளது. இந்தச் சுண்ணாம்புக்கல் வெள்ளை, வெளிறிய வெள்ளை ஆகிய நிறங்களையுடையதாகவும், இடைப்பட்ட அளவு பொடி செய்யப்பட்டதாகவும் தரம் குன்றியதாகவும் ஆனால் நல்ல தரமான சுண்ணாம்புக் கற்கள் இடையிடையே கலந்ததாகவும் காணப்படுகிறது. இப்பகுதியில் சுமார் 30,000 டன் தரமான சுண்ணாம்புக்கல் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களில் சுண்ணாம்புக் கல் இருப்பதால் விவசாயம் செய்ய முடியாது பாதிக்கப்படுவ தாகச் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் சுண்ணாம்புக் கல்லை விற்றுத்தான் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள். அந்தக் கல்லை உபயோகப்படுத்தி ஒரு தொழிற்சாலையை ஏற்பாடு செய்து அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுண்ணாம்புக்கல் மூலமாக எந்த அளவுக்கு ஒரு புதிய தொழிற்சாலையை உருவாக்க முடியும் என்பது பரிசீலித்ததற்குப் பின்னால்தான் சொல்ல முடியும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சுண்ணாம்புக்கல் ஏராளமாகப் பயன்படுத்தப்படுகிற நிலையில் சிமிண்ட் தொழிற்சாலை மேலும் தொடங்கினால் எந்த அளவுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்பது சந்தேகத்திற்குரிய நிலையாக இருக்கிறது. காரணம் ப்ரொடக்ஷன் சர்ப்ளஸ் ஆக இருப்பதுதான். என்றாலும் இது பற்றியும் புவியியல் துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள்.

1970 ஜனவரி 27]

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் பரவலாகக் கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்ய இனிமேலாவது முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்த இடங்களில் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறதோ அதையெல்லாம் ஆராய்கிறோம். ஆனால், தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குப் போதுமான அளவுக்குக் கிடைக்குமா என்பதையும் ஆராயவேண்டும். சுண்ணாம்புக்கல்லைப் பொறுத்தவரையில் ஏராளமாகக் கிடைக்கின்ற காரணத்தினால் சிமிண்ட் தொழிற்சாலை போதுமான அளவுக்கு இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி கெமிக்கல் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்ற கருத்தும் அரசாங்கத்தினிடத்திலே இருந்து வருகிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, மேலூர் வட்டத்திலே சுண்ணாம்பூர், சுக்காம்பட்டி, சிறுகுடி போன்ற இடங்களில் சுண்ணாம்புக்கல் கிடைப்பதினால் பெரிய தொழிற்சாலை இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது தொழிற்சாலையை மேலூர் வட்டத்திலே ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டிலே உபயோகப்படுத்தியிருக்கிற அளவுக்கு எப்படி விற்பது என்பதுதான் இப்பொழுது பிரச்னையாக இருக்கிறது. இதைப்பற்றி மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எனவே இப்போதைக்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பது உகந்ததாக இருக்காது என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது.

திரு. மு. அ. சிவசாமி : தனியார்கள் சுண்ணாம்புக்கல், பாக்ஸைட் போன்றவை எங்கு கிடைக்கிறது என்பதைத் தேடிப்பார்த்து மைனிங் லைசென்ஸ் வேண்டுமென்று மனுச் செய்தால் கலெக்டர் அலுவலகத்திலோ அல்லது தாலுகா அலுவலகத்திலோ வருடக் கணக்கில்ல தேங்கிவிடுகிறது. அதைத் துரிதப்படுத்தி உத்தரவிட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதுகூட மனுச் செய்தால் ஒரு ஆண்டுக்குள் அனுமதியோ மறுப்போ தெரிவிக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது.

காட்டுப் புறம்போக்கு நிலங்கள்

* **வினா 88.—புலவர் பொ. பொன்னம்பலம்** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுப் புறம்போக்கு நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவர அரசுக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?